එම්. යූ. එම්. අලි සබ්රි, පා. ම.
எம். யூ. எம். அலி ஸப்ரி, பா. உ.
**M. U. M. Ali Sabry, PC, M.P.**
විදේශ කටයුතු අමාත්‍ය
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர்
**Minister of Foreign Affairs**

2024 ஜனவரி 01

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தி

சவால்மிக்க ஆண்டிலிருந்து விடைபெறுகின்ற தருணத்தில், புதிய வருடத்தின் விடியலை வரவேற்பதுடன், வளமான எதிர்காலத்தை நோக்கிய நம்பிக்கையுடன் இருக்கின்றேன்.

துன்பம் மற்றும் நெருக்கடியான சூழலில் அமைந்த இக் கட்டான காலகட்டத்தை அனுபவித்த எமது மக்கள், அந்த நேரத்தில் தங்களது வலிமையை உணர்த்தியுள்ளார்கள்.

அவற்றின் பின்னனியில் ஒன்றிணைந்து எந்தத் தடையையும் சமாளித்து, நமது உண்மையான திறனை அடைய முடியும் என்ற நம்பிக்கை எப்போதும் உள்ளது.

கடந்த ஓரிரு ஆண்டுகளாக எமது நாடு பல்வேறு பொருளாதார சவால்களை எதிர்கொண்டிருந்த நிலையில், சிரமங்களுக்கு மத்தியில், பிரகாசமான எதிர்காலத்தின் அத்திவாரம் அமைந்துள்ளது..

வலுவான மற்றும் வளமான நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதில் இலங்கையர்களான நம் அனைவரினதும் உறுதிப்பாடு மற்றும் அர்ப்பணிப்பு இன்றியமையாதவை.

அர்த்தமுள்ள வினைத்திறன் மற்றும் திடமான திட்டங்களுக்கு நம்மை நாம் அர்ப்பணிக்க வேண்டும். இதற்கு சமூகத்தின் அனைத்துத் துறைகளின் கூட்டு முயற்சிகளும் முக்கியமானவை. அரசு, வணிகம், சிவில் சமூகம் மற்றும் தனிநபர்கள் ஒவ்வொருவரும் தத்தமது முயற்சிகளை சிறப்புற செய்வதன் மூலமும், ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலமும், அனைவருக்கும் நிலையான வளர்ச்சி மற்றும் செழிப்பான சூழலை உருவாக்க முடியும்.

இலங்கை அதன் வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் சமூகத்தின் சிறப்பியல்புகளின் பன்முகத்தன்மை குறித்து பெருமை கொள்கிறது. இந்த பன்முகத்தன்மையே நம்மை தனித்துவமாக்குகிறது.

மிகவும் ஐக்கியமான சமுதாயத்தை உருவாக்குவது மட்டுமல்லாமல், நமது நாட்டின் முழு திறனையும் வெளிப்படுத்துவதும் எமது கடமையாகும்.

மலர்ந்துள்ள புத்தாண்டில் ஒற்றுமை, சகிப்புத்தன்மை மற்றும் மரியாதை போன்றவற்றின் உறுதிப்பாட்டையும் கொண்டு, பிரிவினைகளைக் களைந்து பண்முகத்தன்மையை பலமாக கொள்வோம்.

இந்தப் புதிய அத்தியாயத்தின் உறுதியும், நம்பிக்கையும் முன்னேற்றத்தின் உந்துகோலாக செயற்படுவதற்கும், வேறுபாடுகளைக் களைந்து, வரவிருக்கும் சவால்கள் வெற்றி கொள்வதற்கும் மற்றும் வாய்ப்புகளைத் தழுவுவதற்கும் உறுதியாக அமையட்டும்.

முன்னேற்றத்திற்கான பாதையில் செல்லவும், நமது உண்மையான திறனை அடையவும், இலங்கை நம்பிக்கை மற்றும் செழுமையின் கலங்கரை விளக்காக மாறமுடியும்.

மேலும், அனைவரின் வெற்றியையும் உள்ளடக்கிய இலங்கையை கட்டியெழுப்பும்போது, புத்தாண்டு நமது கனவுகள் மற்றும் அபிலாஷைகளுக்கு ஒளி கொடுக்கும் என்பது உறுதியானது.

நம்பிக்கையுடனும் நன்றியுடனும்...

புத்தாண்டு வா்ழ்த்துக்கள்

எம்.யூ.எம். அலி ஸப்ரி
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வெளிவிவகார அமைச்சர்